## எல்லா தரப்பு மக்களும் முன்னேற, திராவிட மாடல் அரசின் நலத் திட்டங்களின் மூலம்

# பெரியார் - அம்பேத்கரின் கருத்துகளைப் பின்பற்றி கலைஞர் வழியில் ஏற்றத்தாழ்வற்ற சமூகம் அமைப்போம்!

## கன்னியாகுமரியில் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!



**கன்னியாகுமரி, மார்ச் 9 -**

**கன்னியாகுமரி மாவட்டம், இறச்சகுளத்தில், தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்கம் ஏற்பாட்டில், அமைக்கப்பட்டுள்ள சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``பெரியாரும் அம்பேத்கரும் சமூகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் ஒழித்து, சமத்துவம் உருவாக வேண்டும் என்று தங்களின் வாழ்க்கை முழுவதும் போராடினார்கள். அவர்களின் கருத்துகளைத்தான் நாம் இன்று உள்வாங்கி, அவற்றைப் பின்பற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம்” என்று குறிப்பிட்டார்..**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

இன்று இந்த இறைச்சல்குளத்தில் நம் சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலையை, உங்களின் முன்னிலையில் திறந்து வைக்கின்ற அரும்பெரும் பாக்கியத்தை பெற்றிருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

முதலில் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, என்னை அழைத்து வந்திருக்கக்கூடிய நம் மாநகராட்சியின் மேயர், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மகேஷ் அவர்களுக்கும், தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்கத்தின் மாநிலத் தலைவர் சகோதரர் தினகரன் அவர்களுக்கும் என் அன்பையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மிகுந்த பெருமை

நம் கன்னியாகுமரி மாவட்டத்துக்குப் பல்வேறு பெருமைகள் உண்டு. மூன்று கடல்கள் சங்கமிக்கின்ற இடம் இந்த குமரி மாவட்டம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்டு, இன்று நம் ஆட்சியில் வெள்ளி விழா காண்கின்ற திருவள்ளுவர் சிலையும் இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் இருக்கிறது. `பொதுவாக வடக்கிலிருந்துதான் இந்தியா தொடங்கும்’ என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால், உண்மையிலேயே தெற்கிலிருந்து, இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்துதான் நம் இந்தியாவே இன்று தொடங்குகிறது. இன்னொரு கூடுதல் பெருமையாக இன்று இந்த இறச்சகுளத்தில் அண்ணல் அம்பேத்கரின் திருவுருவச் சிலையையும் நாம் அமைத்திருக்கிறோம். இதுவும் நம் குமரி மாவட்டத்தின் மிகப்பெரிய பெருமை.

கன்னியாகுமரி என்று சொன்னாலே, ஒற்றுமையும், மத நல்லிணக்கமும்தான், இந்தியா முழுவதும் இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் ஞாபகம் வரும். அப்படிப்பட்ட கன்னியாகுமரியில் இன்று இறச்சகுளத்தில் அண்ணலின் சிலையைத் திறந்து வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

### அம்பேத்கரின் கருத்துகள்

இந்த ஆண்டில் அண்ணல் அம்பேத்கரின் இரண்டாவது சிலையைத் திறந்து வைத்திருக்கிறேன். ஒரு 10 நாட்களுக்கு முன்பு சென்னையில் திறந்து வைத்தேன். இப்படித் தமிழ்நாடு முழுவதும் அண்ணலின் சிலைகளை, நாம் திறந்து வைக்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? ஏதோ அடையாளத்துக்காக நாம் இந்தச் சிலையைத் திறந்து வைக்கவில்லை. அவரின் கருத்துகள், எண்ணங்கள் தமிழ்நாடு முழுக்கப் பரவ வேண்டும், அம்பேத்கரின் கொள்கைகளைப் பட்டிதொட்டியெங்கும் நாம் கொண்டு சேர்க்க வேண்டும் என்றுதான் அவரின் சிலைகளைத் தொடர்ந்து திறந்து வைக்கிறோம்.

### தாடி இல்லாத பெரியார்

தந்தை பெரியார் அவர்களும், அண்ணல் அம்பேத்கர் அவர்களும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சொல்வார். அதுமட்டுமல்ல, தாடி வைத்த அம்பேத்கர்தான் தந்தை பெரியார் என்றும், தாடி இல்லாத பெரியார்தான் அண்ணல் அம்பேத்கர் என்றும் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார். ஏன் அப்படிச் சொன்னார் என்றால், பெரியாரும் அம்பேத்கரும் சமூகத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஏற்றத்தாழ்வுகளையும் ஒழித்து, சமத்துவம் உருவாக வேண்டும் என்று தங்களின் வாழ்க்கை முழுவதும் போராடினார்கள். அவர்களின் கருத்துகளைத்தான் நாம் இன்று உள்வாங்கி, அவற்றை நாம் பின்பற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் இன்று பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள், மகளிர் என இப்படி எல்லாத் தரப்பு மக்களும் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று நம் திராவிட மாடல் அரசில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகிறோம். இந்த முன்னேற்றத்தை அடுத்த கட்டத்துக்குத் கொண்டு செல்லும் வகையில், நம் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துகிறார். உதாரணமாக, நம் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுகின்ற ஒவ்வொரு திட்டத்தையும் நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் உங்களுக்கு அந்த உண்மை புரியும்.

### 960 கோடி பயணங்கள்

2021-இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து மகளிர்க்கான கையெழுத்து. மகளிர்க்கான அந்த விடியல் பயணத் திட்டம். இன்று தமிழ்நாடு முழுவதும் சுமார் 960 கோடி பயணங்களை மகளிர் இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம் மேற்கொண்டிருக்கிறார்கள். இன்று இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் எல்லாம் இந்த மகளிர் விடியல் பயணத் திட்டத்தைத் தங்களின் மாநிலத்தில் அறிமுகப்படுத்துகிறார்கள். அதே மாதிரிப் பள்ளிகளில் குழந்தைகள் அனைவரும் படிக்க வேண்டும், கல்வி மிக மிக முக்கியம். அதனால்தான் நம் முதலமைச்சர் உருவாக்கியது ‘முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்’.

இன்று ஒவ்வொரு நாளும் திங்கள் முதல் வெள்ளி வரை 22 லட்சம் குழந்தைகள் முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகிறார்கள். அதேபோல முதலமைச்சரின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன் திட்டம்’ உங்களுக்குத் தெரிந்திருக்கும். இன்று கூடப் பார்த்தீர்கள் என்றால், ஒன்றிய அரசின் யு.பி.எஸ்.சி (UPSC) தேர்வு முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், செய்திகளில் படித்திருப்பீர்கள். இதில் 10 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று யு.பி.எஸ்.சி தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இரண்டு பேர் அகில இந்தியத் தரவரிசையில் (All India Ranking) முதல் 10 இடங்களில் இடம் பிடித்திருக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேருமே நம் முதலமைச்சர் கொண்டு வந்த `நான் முதல்வன் திட்டத்தின்’ மூலம் பயன் பெற்றவர்கள். அதில் பயிற்சி எடுத்தவர்கள். அகில இந்திய அளவில் இரண்டாம் இடம், இந்தியாவிலேயே முதல் இரண்டு இடங்களுக்குள், இரண்டாம் இடம் பெற்றிருக்கக்கூடிய தங்கை ராஜேஸ்வரி சுபா அவர்கள் நம் தமிழ்நாடு அரசு நடத்துகின்ற விடுதி, நான் முதல்வன் உண்டு உறைவிடப் பயிற்சி மையத்தில் தங்கிப் பயிற்சி பெற்றவர்தான் இன்று இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறார்கள். தமிழ்நாடு அரசின் `நான் முதல்வன் திட்டத்தால்’ இன்று இளைஞர்கள் சாதிப்பது நம் அரசுக்கு, முதலமைச்சருக்கு மிகவும் ஒரு மகிழ்ச்சியான செய்தி, மக்களுக்கும் மிகுந்த பெருமை அளிக்கக்கூடிய ஒரு செய்தி. அதுமட்டுமல்ல, இன்று 10 லட்சம் மாணவ மாணவிகளுக்கு நம் முதலமைச்சர் அவர்கள் மடிக்கணினி வழங்கிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

### திராவிட மாடல் 2.0 ஆட்சி

அனைத்துக்கும் மேலாக ஒட்டுமொத்த இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைக்கக்கூடிய ஒரு திட்டம், அதுதான் நம் தேர்தல் அறிக்கையில் சொன்ன திட்டம் ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்’. இந்தத் திட்டத்தின் மூலம் இன்று கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் உரிமைத் தொகையாக நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். நம் முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். திராவிட மாடல் 2.0 ஆட்சி நிச்சயமாக அமையும், அமைந்த உடனே உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்ற வாக்குறுதியையும் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்.

இன்று இந்த உரிமைத் தொகை திட்டத்தை எப்படியாவது முடக்க வேண்டும், சட்டமன்றத் தேர்தல் வருகிறது அதைக் காரணமாகக் காட்டிப் பல மாநிலங்களில் முடக்கி இருக்கிறார்கள். மூன்று மாதங்களுக்கு முடக்க வேண்டும் என்று சிலர் சதித்திட்டம் போட்டார்கள். இதை அறிந்து கொண்ட நம் முதலமைச்சர் இன்று பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதம் சேர்த்து 3,000 ரூபாய், அத்துடன் சேர்த்து கோடைக்கால சிறப்பு நிதியாக 2,000 ரூபாய் என ஒரு கோடியே 31 லட்சம் குடும்பத்துக்கு 5,000 ரூபாயை நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு திட்டங்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய கைம்பெண்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் சுமார் 38 லட்சம் பேருக்கு 2,000 ரூபாய் கோடைக்காலச் சிறப்பு நிதியாக நம் முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

### அயலக உயர்கல்வித் திட்டம்

இன்று தமிழ்நாட்டில் இருந்து வெளிநாட்டுக்குச் சென்று உயர்கல்வி படிக்கின்ற ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்க, அண்ணல் அம்பேத்கரின் பெயரில் ‘அயலக உயர்கல்வித் திட்டம்’ செயல்படுத்தப்படுகிறது. முந்தைய ஆட்சியிலும் இந்தத் திட்டம் இருந்தது. ஆனால் ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். முந்தைய அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் 10 ஆண்டுகளில் பயன்பெற்ற மாணவர்கள் எத்தனை பேர் தெரியுமா? வெறும் 6 மாணவர்கள். ஆனால், நம் திராவிட மாடல் அரசில் இந்த ஐந்து ஆண்டுகளில் 385 மாணவர்களுக்கு 165 கோடி ரூபாய் கல்வி உதவித் தொகையாக அண்ணன் அம்பேத்கர் திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

### சமத்துவ நாள் உறுதிமொழி

காலனி என்கிற பெயரை மாற்றி, குடியிருப்புகள் என்று சொல்ல வைத்ததும் நம் திராவிட மாடல் அரசுதான், நம் முதலமைச்சர் அவர்கள்தான். ஒடுக்கப்பட்ட மக்கள் தொழில் தொடங்க வேண்டும் என்று, அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அனைத்துக்கும் மேலாக, அம்பேத்கரின் பிறந்த நாளைச் ‘சமத்துவ நாள்’ என அறிவித்தது நம் அரசுதான். அறிவித்தது மட்டும் இல்லாமல், அம்பேத்கரின் பிறந்த நாள் அன்று தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்த வேண்டும் என்று, சமத்துவ நாள் உறுதிமொழியை அனைவரும் ஏற்க வைத்த அரசு நம் திராவிட மாடல் அரசு.

### கன்னியாகுமரி திட்டங்கள்

இந்த கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தை விரிவாக்கம் செய்ய 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வாணியக்குடியில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்க, 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

தேங்காய்ப்பட்டணம் மீன்பிடி துறைமுகம் 235 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

நாகர்கோவில் மாநகராட்சியில் 56,000 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மார்த்தாண்டத்தில் தினசரி சந்தை, பத்மநாபபுரம், குளச்சலில் புதிய பேருந்து நிலைய வசதி.

கோட்டாறு புனித சவேரியார் தேவாலயம் சீரமைக்க, 2 கோடியே 50 லட்சம் ரூபாய், அருமநல்லூரில் கிறிஸ்தவர்களுக்கான புதிய கல்லறைத் தோட்டம். பத்மநாபபுரம் கிராமத்தில் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் அமைக்க இடம் இப்படிப் பல்வேறு திட்டங்களை நான் அடுக்கிக் கொண்டேபோகலாம்.

### இரட்டை இலக்க வளர்ச்சி

இது போன்ற பல்வேறு திட்டங்களால்தான் இன்று இந்தியாவிலேயே வளர்ந்து வருகின்ற மாநிலங்களில் நம் தமிழ்நாடு முதன்முறையாக ‘இரட்டை இலக்க வளர்ச்சி’ 11.19 சதவிகித வளர்ச்சியோடு இன்று இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம் தமிழ்நாடு இடம் பெற்றிருக்கிறது. நம் தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பரவலாக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால், சங்கிகள் கூட்டம் வெறுப்பை மட்டுமே பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் எப்படியாவது வெறுப்பைப் பரப்பலாம் என்று முயற்சி செய்து கொண்டே இருப்பார்கள். ஆனால் அதையெல்லாம் நம் தமிழ்நாட்டு மக்கள், நம் முதலமைச்சர் உங்களின் உறுதுணையோடு முறியடித்துக் கொண்டிருக்கிறார்.

அதனால்தான் தேர்தல் வந்தவுடன் இப்பொழுது மீண்டும் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் தமிழ்நாட்டின் பக்கம் திரும்ப ஆரம்பித்திருக்கிறார்கள். இனிமேல் தேர்தல் வரும் வரை, இன்னும் 50 நாட்களுக்கு மீண்டும் தமிழ்நாட்டைச் சுற்றிச் சுற்றியே வருவார்கள். ஆனால் ஒன்றிய அரசு மூலமாக ஒரு உருப்படியான திட்டம் கூடத் தமிழ்நாட்டுக்கு வழங்க மாட்டார்கள். பிரதமரும் அமைச்சரும் மட்டும் வருவார்கள், ஆனால், தமிழ்நாட்டுக்கு எந்தத் திட்டத்தையும் கொடுக்க மாட்டார்கள், எந்த நிதியையும் கொடுக்க மாட்டார்கள்.

### குலக்கல்வித் திட்டம்

நியாயமாகக் கொடுக்க வேண்டிய நிதியையும் கொடுக்கவில்லை. சென்ற ஆண்டு புதிய கல்விக் கொள்கையை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியது. இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் தமிழ்நாடு ஏற்க முடியாது என்று முதலமைச்சர் சொல்லிவிட்டார். ஏன்? புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டோம் என்றால், நம் பிள்ளைகள் மீது மீண்டும் மும்மொழிக் கொள்கையைத் திணித்து, இந்தியையும் சமஸ்கிருதத்தையும் தமிழ்நாட்டுக்குள் திணிக்க ஒன்றிய அரசு முயற்சி செய்யும். புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டோம் என்றால், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது திணிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு முயற்சிக்கும்.

``புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்தான் நம் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நிதிப் பகிர்வு தருவோம். இல்லாவிட்டால், கல்வி நிதியான, இந்த ஆண்டுடன் சேர்த்து 3,500 கோடி ரூபாய் தர வேண்டிய நிதியைத் தரமாட்டோம்” என்கிறார்கள். ஆனால், நம் முதலமைச்சர் சொல்லிவிட்டார், ``3,500 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுக்கிறேன் என்று சொன்னாலும், உங்களின் புதிய கல்விக் கொள்கையை நான் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடமாட்டேன்.. ஏனென்றால், நீ தமிழ்நாட்டு மக்கள் மீது மீண்டும் இந்தியைத் திணிக்க முயற்சி செய்கிறாய், மீண்டும் சமஸ்கிருதத்தைத் திணிக்க முயற்சி செய்கிறாய், மீண்டும் குலக்கல்வித் திட்டத்தைத் திணிக்க முயற்சி செய்கிறாய். அதனால்தான் தமிழ்நாட்டு மக்களும் நம் ஒன்றிய அரசை, பா.ஜ.க-வை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை.

இதனால்தான் ஈ.டி. (ED), சி.பி.ஐ. (CBI) இதையெல்லாம் வைத்துத் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பா.ஜ.க. கட்டாய கூட்டணியை இன்று உருவாக்கியிருக்கிறார்கள். நான் கூட சமீபத்தில் சொன்னேன், பாசிஸ்டுகள் யாரை வேண்டுமானாலும் மிரட்டலாம், ஆனால், தமிழ்நாட்டு மக்களை, சாமான்ய மக்களை யாராலும் மிரட்ட முடியாது. எந்த உருட்டல் மிரட்டலுக்கும் தமிழ்நாட்டு மக்கள் பயப்பட மாட்டார்கள். இப்படி எல்லாரையும் பயமுறுத்தித்தான் இன்று பா.ஜ.க. தன் கூட்டணியை உருவாக்கியிருக்கிறது. இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலத் தலைவர்கள் எல்லாம் பா.ஜ.க.-வுக்குப் பயப்படுகிறார்கள். ஆனால் பா.ஜ.க-வுக்குப் பயப்படாமல், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டிருக்கக்கூடிய ஒரே தலைவர் நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

நம் முதலமைச்சர் அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் காட்டுகின்ற அந்த அன்பும் ஆதரவும்தான் அவருக்கு இந்தத் தைரியத்தையும் துணிச்சலையும் தருகிறது. அதனால் நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது, நீங்கள் அனைவரும் நம் முதலமைச்சர் அவர்களுக்குத் தொடர்ந்து உங்களின் ஆதரவை வழங்க வேண்டும். நம் முதலமைச்சரின் கரத்தை நீங்கள் வலுப்படுத்த வேண்டும். அதற்கு வரும் சட்டமன்றத் தேர்தலின் மூலம், பாசிஸ்டுகளையும் அடிமைக் கூட்டத்தையும் மறுபடியும் நாம் அனைவரும் சேர்ந்து விரட்டியடிக்க வேண்டும்.

### மகத்தான கூட்டணி

நம் தலைவர் அவர்கள் ஒரு மகத்தான கூட்டணியை அமைத்திருக்கிறார்கள். குறிப்பாகக் கன்னியாகுமரி மக்கள் விரும்புகின்ற ஒரு கூட்டணியை உறுதி செய்திருக்கிறார்கள். ஆகவே 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வென்று காட்ட வேண்டும். அதற்கான தொடக்கமாக, நாகர்கோவில், பத்மநாபபுரம், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர், முக்கியமாக, கன்னியாகுமரி என இந்த ஆறு தொகுதிகளிலும் நம் வெற்றியை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும். நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும். அதற்கு அடுத்து வருகின்ற ஒவ்வொரு நாளும் அயராத உழைப்பை நாம் கொடுப்போம், அதற்கான உறுதியை இன்று அண்ணல் அம்பேத்கரின் சிலைக்கு முன்பு நாம் ஏற்போம் என்று கூறி இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மனோதங்கராஜ், கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மகேஷ், மாநில உணவு ஆணையத் தலைவர், சுரேஷ்ராஜன், தமிழ்நாடு தலித் உரிமைகள் பாதுகாப்பு இயக்க மாநிலத் தலைவர் தினகரன், கழகத்தின் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில செயலாளர் தில்லை செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராஜன், மாவட்ட பொருளாளர் கெட்சன், கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, ஜி.பி. ராஜா, கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் தாமரை பாரதி, சிவராஜ், மாநகரச் செயலாளர் ஆனந்த், ஒன்றிய செயலாளர் செல்வன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அகஸ்தீசன், மாநகர அமைப்பாளர் சி.டி.சுரேஷ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.